முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருமங்கலம்
முன்னிலை : திரு. E. மணிகண்டன், B.A., B.L.,
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.
2025–ம் ஆண்டு அக்டோபர் மாதம் 08ம் நாள், புதன்கிழமை
IA.No.5/2024
இன்
அசல் வழக்கு எண்.158/2015
-----

1) அழகர்
2) வாணி ... மனுதாரர்கள்/ வாதிகள்

/ எதிர்/

1) சுந்தர் (இறப்பு)
2) பாஸ்கர் ... எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி
3) அழகம்மாள்
4) தனலெட்சுமி ... 3, 4 எதிர்மனுதாரர்கள்/
3, 4 உத்தேச பிரதிவாதிகள்

இம்மனுவானது 24.09.2025ம் தேதி இன்று என் முன் விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர்கள்/ வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.S.கோகுலகண்ணன் அவர்கள் ஆஜராகியும், 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.M.பொன்னம்பலம் அவர்கள் ஆஜராகியும், 3, 4 எதிர்மனுதாரர்கள் இம்மனுவை பொறுத்து ஒருதலைபட்சமாக்கப்பட்டும், 1ம் எதிர்மனுதாரர் இறந்துவிட்ட நிலையில், மனு மற்றும் எதிருரை மற்றும் சாட்சிய சான்றாவணங்களைப் பரிசீலனை செய்தும், இதுநாள் வரை இந்நீதிமன்றத்தின் முன் பரிசீலனையின் கீழ் இருந்து வந்த வழக்கில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்

**உத்தரவு**

இம்மனுவானது உத்தேச 3, 4 எதிர்மனுதாரர்களை தாவா பிராதில் 3, 4 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டி மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் கட்டளை 1 விதி 10(2) மற்றும் விதி 151ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுவின் சுருக்கம் :**

2.1) அசல் வழக்கானது கடந்த 2015ம் ஆண்டு 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மேலும், மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இம்மனுவில், அசல் வழக்கில் 3, 4 எதிர்மனுதாரர்களை 3, 4 பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டும் என்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2.2) 2ம் எதிர்மனுதாரர்/2ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்த எதிருரையில், 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக எந்தவிதமான வழக்கு மூலமும் எழவில்லை என்றும், இந்த மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதல்ல என்றும், தள்ளுபடி செய்யப்பட வேண்டியது என்றும் கூறி ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டது.

**தீர்மானிக்க வேண்டிய விசயம் :**

3. இந்த மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இந்த மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பதே ஆகும்.

**தீர்வு :**

4. இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது. இந்த மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய

விசயம் என்னவென்றால், மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.158/2015ல் 3, 4 எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகளாக சேர்க்கப்பட வேண்டுமா என்பதே ஆகும். இந்த மனுவானது கட்டளை 1 விதி 10(2) மற்றும் பிரிவு 151 உரிமையியல் விசாரணைமுறை சட்டத்தின் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5. இருதரப்பு வாதுரைக்கும் போதிய வாய்ப்பளிக்கப்பட்டது. வழக்கு ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டது.

6. வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்ததில், அசல் வழக்கானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில், இந்நிர் 1 , 2 பிரதிவாதிகள் மீது நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்நிலையில், அசல் வழக்கானது 2015ல் தாக்கல் செய்யப்பட்டு இருதரப்பு சாட்சி விசாரணை 21.02.2024ல் முடிக்கப்பட்டு, இருதரப்பு வாதத்திற்காக சுமார் 2 1/2 ஆண்டுகளாக வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது. இந்நிலையில், வாதி தரப்பில் 3, 4 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்துள்ளார்கள்.

7. அசல் வழக்கின் வழக்கு மூலத்தில் வாதிகள் கடந்த 02.06.2015ல் வழக்கு சொத்தில் கல்தூணை அமைக்க முயற்சி செய்ததாகவும், அப்போது வாதியின் அனுபவத்தை பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்து தொடர்ந்து பிரச்சனை செய்து வந்ததாகவும், அதன்படியே வழக்கு மூலம் எழுந்துள்ளது என்றும் கூறப்பட்டுள்ளது. இந்நிலையில், 3, 4 பிரதிவாதிகளுக்கு எதிராக வாதி தாக்கல் செய்த வழக்குரையில் வழக்கு மூலம் எதுவும் இல்லை. மேலும், அசல் வழக்கானது வழக்கு சொத்தை பொறுத்து வாதியின் அனுபவத்தை 1, 2 பிரதிவாதிகள் இடைஞ்சல் செய்யாமல்

இருக்கும்விதமாக 1, 2 பிரதிவாதிகளுக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மாறாக, வழக்கு சொத்தை பொறுத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் எதுவும் கோரப்படவில்லை.

8. 2ம் எதிர்மனுதாரர் தரப்பு வாதத்தின்போது, எடுத்துரைக்கப்பட்டதன்படி 3, 4 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக எவ்வித வழக்கு மூலமும் அசல் வழக்கை பொறுத்து இல்லை என்ற நிலையிலும், அசல் வழக்கானது வழக்கு சொத்தை பொறுத்து நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி மட்டுமே தாக்கல் செய்யப்பட்டுள்ளநிலையிலும், அசல் வழக்கானது கடந்த 2015ம் ஆண்டு முதல் நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும், காலம் கடந்து 3, 4 எதிர்மனுதாரர்களை அசல் வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க வேண்டுமென்று மனு தாக்கல் செய்துள்ளதை கருத்தில் கொண்டும், அசல் வழக்கானது இருதரப்பு சாட்சி விசாரணை முடிக்கப்பட்டு, இருதரப்பு வாதுரைக்காக நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும் இம்மனுவானது சட்டப்படி நிலைத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

**முடிவாக,** மனுதாரர்கள்/வாதிகள் தரப்பில் தாக்கல் செய்த இம்மனுவானது தள்ளுபடி செய்யப்பட்டு இந்நீதிமன்றத்தால் உத்தரவிடப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு நேரடியாக சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால்

பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, பின்னர் இன்று 08.10.2025ம் நாள் என்னால் திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.08 18:24:01 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, (FAC)
திருமங்கலம்.

**<u>இணைப்பு</u>** :

1. **<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>** : இல்லை

2. **<u>மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** :

| | |
|---|---|
| ம.சா.ஆ.1 | மாண்புமிகு திருமங்கலம் சார்பு நீதிமன்ற OS No.290/2021ல் தாக்கல் செய்யப்பட்ட ஆணையர் அறிக்கை நீதிமன்ற சான்றிட்ட நகல். |
| ம.சா.ஆ.2 | 25.04.2003ம் தேதியிட்ட தானசெட்டில்மெண்ட் ஆவணம் சார்பதிவாளர் நகல். |

3. **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சி</u>** : இல்லை

4. **<u>எதிர்மனுதாரர்கள் தரப்பு சான்றாவணங்கள்</u>** : இல்லை

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2025.10.08 18:24:08 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,(FAC)
திருமங்கலம்.

I.A.No. 5/2024
in
O.S.No.158/2015
Order
D.D. 08.10.2025